**கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவகம் - 2015**

---

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட 2002 இன் 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவக வழிகாட்டியின் 23 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் III ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நிலையான சொத்துக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 207,525,093 கிரயமான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் கூட்டப்பட்டிருந்த நிலையான சொத்துக்களின் பெறுமதிக்கும் நிலையான சொத்துப் பதிவேட்டில் காட்டப்பட்டிருந்த பெறுமதிக்கும் இடையே ரூபா 75,821,489 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 வருடங்களுக்கு முன்னர் பரீட்சைகள் திணைக்களத்திற்கும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கும், தேசிய விஞ்ஞான மன்றத்திற்கும் சேவை வழங்குவதற்காக ரூபா 1,747,525 தொகையொன்று பெற வேண்டியிருந்த போதிலும், இந்த மீதியை அறவிடுவதற்கு நிறுவகத்தால் போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இடர் கடன் வழங்கும் போது பல்கலைக்கழக சேமலாப நிதியத்தை பிணையாகப் பயன்படுத்திய மூன்று நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 217,584 கூட்டுத்தொகையான கடன் மீதிக்காக 16 வருடங்களுக்கும் 22 வருடங்களுக்கும் இடையிலான காலமொன்று கடந்திருந்த போதிலும் அந்தப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) உடன்படிக்கை பிணைமுறி மீறப்படாமையின் காரணமாக மூன்று விரிவுரையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய 5 வருடங்களுக்கும் 12 வருடங்களுக்கும் இடையிலான காலமாகக் கொண்டுவரப்படுகின்ற ரூபா 6,057,990 கடன் மீதியை அறவிடுவதற்காக பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டம் மற்றும்

உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் ஏற்பாடு மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>நிதிப்பிரமாணம் 371 | பதவிநிலையற்ற 50 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 8,738,543 கூட்டுத்தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2015 யூலை 14 இன் 3/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | முற்பணம் வழங்கக்கூடிய ஆகக் கூடிய எல்லைக்கான ரூபா 100,000 இனை விஞ்சி நிறுவகத்தினால் 31 சந்தர்ப்பங்களின் போது ரூபா 104,150 முதல் ரூபா 325,750 வரையிலான வீச்சில் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) | 2004 யூலை 29 இன் பீஈடீ/25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாது ரூபா 561,816,857 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் உயர் கல்வி நிறுவனங்களினதும் தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகள் | நிறுவகத்தின் 39 கல்விசார் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் விடுமுறைகளைப் பதிவு செய்யாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 61,951,795 சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (உ) | 1978 திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் 1979 நவம்பர் 13 அந் திகதிய 49 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுக் சுற்றறிக்கை | செயற்திட்ட இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 5,269,536 பெறுமதியான நடைமுறையல்லாச் சொத்துக்களுக்காக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

### 2.5 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தில் கம்பனியொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் உயர் கல்வி அமைச்சினதும் சிபாரிசுடன் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான அங்கீகாரமொன்று இல்லாமல் கம்பனிச் சட்டத்தின் கீழ் 2006 ஆம் ஆண்டின் போது தீக்ஷண கம்பனி என்ற பெயரில் பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்று பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) முறையான அங்கீகாரமின்றி நிறுவகத்தில் நடாத்தப்படுகின்ற வெளிவாரி பாட நெறிகளின் வருமானத்தில் கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினருக்கு

மீளாய்வாண்டின் போது ரூபா 2.102,100 தொகை கௌரவப்படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிறுவகத்தின் சகல வருமானங்களும் நிறுவகத்தின் பெயரிலுள்ள நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு இணங்காத வகையில் முறையான அங்கீகாரமின்றி நிறுவகத்தினால் பல்வேறு பெயர்களின் 06 நிதியங்கள் பேணப்பட்டிருந்ததுடன் நிறுவகத்தின் வருமானத்தில் ரூபா 39,349,567 தொகையும் வெளிநாட்டு செயற்திட்டத்திற்காகப் கிடைத்த பணத்தில் ரூபா 40,332,985 தொகையும் மேற்கூறப்பட்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) கணணி கற்கை நிறுவக வழிகாட்டியின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகம் புதிதாக ஆரம்பிப்பதற்குத் தீர்மானத்த பாடநெறிகளுக்காக பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், நிறுவகம் நடாத்திச் செல்கின்ற 05 விஞ்ஞானமாணி, முதுமாணி மற்றும் இளமாணி பாட நெறிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி நடாத்திச் செல்லப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 7,632,010 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 30,988,224 ஆக இருந்தமையால். முன்னைய ஆணடுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 23,356,214 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. அரசாங்க மானியம் ரூபா 28,584,000 இனால் அதிகரித்திருந்த போதிலும், ஊழியர் நிர்வாகச் செலவினம் ரூபா 27,058,395 இனால் அதிகரித்தமை மற்றும் பாடநெறி வருமானம் ரூபா 29,274,834 இனால் குறைவடைந்தமை மேற்கூறப்பட்ட வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது கடந்த 04 வருடங்களுடனும் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மிகை குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், ஊழியர் ஊதியம், அரசிற்குச் செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றைக் கவனத்திற் கொள்ளும் போது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பங்களிப்பு 8 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் பின்பற்றுகின்ற 9/2010 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையில் இல் குறிப்பிடப்பட்ட விகிதத்தை அடிப்படையாகக் கொண்ட தூர அளவின் அடிப்படையில் அழைப்பு விடுவிக்கப்பட்ட விரிவுரையாளருக்கும் போக்குவரத்து படியொன்று செலுத்த முடியுமாக இருந்த போதிலும் அதற்கு இணங்காத வகையில் வருகைதரும் ஒரு நாளைக்கு ரூபா 1,000 வீதம் நிலையான தொகையின் அடிப்படையில் 38 விரிவுரையாளர்களுக்கு ரூபா 517,000 போக்குவரத்துப் படி வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவகத்தால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி மருத்துவ காப்புறுதித் திட்டமொன்று பேணிச்செல்லப்படுவதுடன் மீளாய்வாண்டின் போது பாட நெறியிலிருந்து உழைக்கப்பட்ட வருமானத்தில் ரூபா 2,159,349 தொகை மற்றும் செயற்திட்டங்களின் மிகையிலிருந்து ரூபா 1,014,208 தொகை மேற்கூறப்பட்ட நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. இந்த நிதியத்திலிருந்து ரூபா 3,137,921 தொகை மருத்துவ பட்டியல்களுக்கு மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

(இ) நிறுவகத்தின் பதவியணியினரால் நிதிகளை பயன்படுத்துவதன் மூலம் நடாத்திச் செல்கின்ற நலன்புரி நிதியமொன்றிற்கு பாடநெறியிலிருந்து உழைக்கப்படுகின்ற வருமானத்தில் ரூபா 3,204,717 தொகை மற்றும் செயற்திட்டத்திற்காக கிடைக்கின்ற வெளிநாட்டு நிதியத்திலிருந்து ரூபா 1,014,208 தொகை மாற்றப்பட்டிருந்ததுடன் மேற்கூறப்பட்ட நிதி மாற்றங்களுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரி என்பவற்றின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பேராசிரியர்.வீ.கே. சமரனாயக்க நிதியத்தின் மீதி ரூபா 14,306,550 ஆக இருந்ததுடன் 2012 ஆம் ஆண்டு முதல் இந்த நிதியம் குறித்த நோக்கங்களை அடைவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உரியவாறு செலவினங்கள் எதிர்வு கூறப்பட்டு செலவின மதிப்பீடு தயாரிக்கப்படாமல் முற்பணம் வழங்கப்பட்டமையின் காரணமாக 22 சந்தர்ப்பங்களின் போது தேவையாக இருந்த ரூபா 160,112 கூட்டுமொத்த செலவினங்களுக்காக ரூபா 427,250 கூட்டுத்தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தக்ஷண கம்பனி தனியாக சட்டரீதியான அலகொன்றாக தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் நிர்வாக நடவடிக்கைகளை கணனி கற்கை நிறுவகத்தில் நடாத்திச் செல்லுதல் நிறுவகத்தின் பதவியணியினரும் கம்பனியின் பதவியணியினர்களும் ஒரே பிரிவில் செயற்படுதல், பௌதீக வளங்களை பொதுவாகப் பயன்படுத்துதல் போன்றவற்றின் காரணமாக கணனி முறைமையை வடிவமைத்தல் மற்றும் கணனி விரிவுரைக்காக கிடைத்துள்ள கட்டளைகள் மற்றும் வருமானம் என்பவற்றை குறிப்பாக இனங்காண முடியாதிருந்தது.

(ஆ) நிறுவகத்தில் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றிய இரண்டு மென்பொருள் பொறியியலாளரின் சேவை 2015 சனவரி 31 ஆந் திகதி முடிவுறுத்தி அந்த இரண்டு பொறியியலாளர்களும் தீக்ஷண கம்பனிக்கு 2015 பெப்ரவரி 01 ஆந் திகதியிலிருந்து சேர்க்கப்பட்டிருந்தனர்.

(இ) திக்ஷண கம்பனியின் பிரதான வியாபார நடவடிக்கைகள் கணனி கற்கைகள் நிறுவகம் வழங்குகின்ற சேவைக்கு சமமானவையால் தீக்ஷண கம்பனி கணனி கற்கை நிறுவகத்தின் போட்டி வியாபாரமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) தீக்ஷண கம்பனியின் கணக்கீட்டு நடவடிக்கைகள் கணனி கற்கைககள் நிறுவகத்தின் சிரேஷ்ட உதவி நிதியாளரினால் மேற்பார்வை செய்யப்பட்டிருந்ததுடன்

அதற்காக கணக்காண்டில் ரூபா 251,000 தொகை நிதியாளருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் பிரகாரம் அரசாங்கமும் அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனங்களும் 51 சதவீதத்திற்கு மேற்பட்ட உரித்தைக் கொண்டுள்ள கம்பனிகளின் கணக்காய்வு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும், ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கணனி கற்கை நிறுவகத்திற்கு 100 சதவீத உரித்துடைய தீக்ஷண கம்பனியின் வெளிக் கணக்காய்வு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அங்கீகாரமின்றி தனியார் கணக்காய்வுக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஊ) தீக்ஷண கம்பனி தமது சேவை நாடுனர்களிடமிருந்து கிடைக்கின்ற கட்டளைகளின் பெறுமதியில் 80 சதவீதத்திற்கு மேற்பட்ட தொகையை அதன் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரை உள்ளடக்கிய பதவியணியினருக்கு படியாக வழங்கும் கொள்கையொன்று பின்பற்றப்பட்டமையின் காரணமாக ஏனைய தொடர்புடைய செலவினங்களுடன் மொத்தச் செலவினங்கள் அனேகமாக வருமானத்தை விஞ்சக் கூடியதாக இருந்தமையாலும் 2015 ஆம் ஆண்டில் ரூபா 5,005,000 சேவை வருமானமொன்று பெறப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 4,318 தொகையான மிகை மிகவும் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

### 4.4 நிதியத்தின் குறைவான பயன்பாடு

செயற்திட்டத்திற்காக வெளிநாடுகளிலிருந்து கிடைக்கின்ற நிதியில் பேணிச் செல்லப்படுகின்ற நடைமுறைக் கணக்கில் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 65 மில்லியன் மீதியொன்று காணப்பட்டதுடன் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அந்தக் கணக்கின் மீதி முறையே ரூபா 44 மில்லியன் மற்றும் ரூபா 51 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் உரிய நிதி இலக்கிடப்பட்ட பணிகளிற்காக உரிய பிரகாரம் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் மேலதிக நிதியை குறுகிய கால முதலீடுகளில் ஈடுபடுத்துவதன் மூலம் வருமானமொன்றை உழைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 பதவியணியினர் நிர்வாகம்

நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்பட்ட 92 வெற்றிடங்களுக்காக ஊழியர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கும் புறம்பாக ஒப்பந்த அடிப்படையில் 66 ஊழியர்களுக்கு சேவை நீடிப்பு வழங்கி தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தின் தாய் நிறுவனமான கொழும்பு பல்கலைக்ககழகத்தில் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் இருவரை உள்ளடக்கிய வலுவான உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கும் போதும், கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள சகல நிறுவனங்களினதும் உள்ளகக் கணக்காய்வு அந்த கணக்காய்வுப் பரிவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தும் கணனி கற்கை நிறுவகத்தில் மாத்திரம் உள்ளகக் கணக்காய்வு தனியார் கணக்காய்வு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு வருடாந்த கணக்காய்வு கட்டணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 350,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | சொத்துக்கள் உரியவாறு பதிவேடுகளுக்குக் கொண்டவரப்படாமை, மீள் பெறுமதியிடாமை, பொருட்பதிவேட்டுப் புத்தகம் பராமரிக்காமை, |
| (ஆ) | முற்பணக் கட்டுப்பாடு | பதவிநிலையற்ற உத்தியோகத்தருக்கு முற்பணம் வழங்குதல், எல்லையை மிகைத்து முற்பணம் வழங்குதல், தேவையை இனங்காணாது கண்டறிந்து முற்பணம் வழங்கியமை |
| (இ) | பதவியணியினர் நிர்வாகம் | பதவியணியினர் தேவையின் அங்கீகாரிக்கப்பட்ட பதவியணியைத் திருத்துதல், மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் |
| (ஈ) | புதிய பாடநெறிகளை ஆரம்பித்தல் | தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |